சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். ஓ.எஸ். 173/2022

**PW 1 - முகம்மது ஷெரீப்** **18.07.2024**

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 1,2 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பி.இ. சிவில் இன்சினியரிங் படித்துள்ளேன். அப்ரூவல் வாங்கி தான் 1,2 பிரதிவாதிகள் கட்டிடம் கட்டினார்கள் என்றால் சரிதான். 1,2 ம் பிரதிவாதிகளிடம் மொத்தம் 7 அல்லது 8 சென்ட் இருக்கும், சரியாக தெரியவில்லை. சொத்தானது அங்கலக்குறிச்சி கிராமத்தில் உள்ளது. ஊராட்சியில் 2500 சதுர அடிவரை கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி பெற முடியும். வாசாஆ.1 ஒப்பந்தம் என்னால் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்ததின் அடிப்படையில் தான் 1,2 பிரதிவாதிகளுக்கு வங்கி கடன் பெற்றுக்கொடுத்தேன் என்றால் வங்கி கடன் நான் பெற்றுக்கொடுக்கவில்லை. வாசாஆ 1-ல் 19.02.2021 ம் தேதி கையெழுத்து செய்தேன். அப்ரூவலை பார்த்தால் தான் ஊராட்சியில் எத்தனை சதுர அடிக்கு கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டது என தெரியும். எனக்கு தெரியாது என்றால் இரண்டு பகுதியாக அனுமதி பெற்றதால் பார்த்து தான் சொல்ல முடியும். முதலில் 1000 சதுரடிக்கும் பிறகு 1000 சதுரடிக்கும் அனுமதி வாங்கப்பட்டது. அந்த அனுமதியின் அடிப்படையில் விதிகளுக்குட்பட்டு நான் கட்டிடம் கட்டினேன் என்றால்

அனுமதிப்படி கட்டவில்லை. முதல் அனுமதி ஒப்பந்தத்திற்கு பிறகுதான் வாங்கப்பட்டது. அனுமதி வாங் கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு தான் நான் ஸ்ட்க்சரல் பிளான் தயாரித்தேனா என்றால் அப்ரூவல் பிளான் வேறு வோர்க்கிங் பிளான் வேறு. வாசாஆ 2 படி 2435 சதுரடி கட்டுமானம் கட்டுவதற்கு தேவையான ஸ்ட்க்சரல் டிசைனிங் போடப்பட்டது. 2435 சதுரடிக்கு அஸ்திவாரம் போடப்பட்டது. பிறகு கட்டிடத்தில் பிரச்சனை ஏற்பட்டு அது முடிவு காணப்பப்ட்டு 2100 சதுரடிக்கு வணிக கட்டிடம் கட்டப்பட்டது. 26*36 அளவு கொண்ட 936 சதுரடிக்கு ஒரேயொரு கடை மட்டும் கட்டப்பட்டது என்றால் சரியல்ல. அரசு ஒப்புதலும் 936 சதுரடிக்குத்தான் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. 2100 சதுரடிக்கு நான் கட்டிய வணிக வளாகத்தின் புகைப்படம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாசாஆ 1 -பதிவு செய்யப்படாததாலும் முத்திரை தீர்வை செலுத்ததாலும் இவ்வழக்கு தாக்கல் செய்வது தவறு என்றால் வேலை செய்ததன் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிராதிலோ பிரமாண வாக்குமூலத்திலோ என்ன விதமான வில்லங்கம் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் இடத்தின் அளவு பிரச்சனை என சொல்லியுள்ளேன். கார் போர்ட்டிகோ டைல்ஸ் மட்டும் நான் ஒட்டவில்லை, மற்ற வேலைகளை முடித்துவிட்டேன். நான் செய்யாத வேலையின் தொகை ரூ.3,00,000/- இருக்கும். வாசாஆ 6- 05.01.2022 ம் தேதி தயாரிக்கப்பட்டது தான் என்றால் அதற்கு முன்பே தயாரிக்கப்பட்டது, 05.01.2022 ம் தேதி 1,2 பிரதிவாதிகளிடம் கொடுக்கப்பட்டது.

அப்போது வரை எங்களிடையே பிரச்சனையில்லை என்றால் சரியல்ல, எங்களிடையே நவம்பர் 2021 முதல் பிரச்சனை ஏற்பட்டது. அதன் பிறகு நான் வேலை செய்யவில்லை என்றால் டிசம்பர் 2021 முதல் வேலை செய்யவில்லை. அதுவரை எந்த பில்லும் பிரதிவாதிகளிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, வாசா,ஆ 6 மட்டும் கொடுக்கவில்லை. ரப் பில்கள் பிரதிவாதிகளிட்ம் கொடுத்ததற்கு ஆதரவு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாசாஆ 6 ஒரே நாளில் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல, அது தயாரிக்க 2,3 நாட்கள் ஆகும். 2 பில்கள் தவிர மற்ற பில்களில் தேதியில்லை என்றால் அதன் மற்ற குறிப்புகள் பின் பக்கத்தில் உள்ளன. 05.01.2022 ம் தேதியிட்ட சப் பில்கள் தான் அதில் உள்ளன. 05.01.2022 ல் காம்பவுண்ட் வால் என்பது கொட்டேசனிலும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், பில்லில் அந்த தொகை கழிக்கப்பட்டுள்ளது. சாட்சி வாசாஆ 6 யை பார்வையிட்டு கூடுதலாக கட்டப்பட வேண்டிய காம்பவுண்ட் வால் குறித்து சொல்லப்பட்டுள்ளதாகவும் அதனால் அது தொகையில் கழிக்கப்படவில்லை என தெரிவித்தார். 04.01.2022 ம் தேதி எனக்கும் பிரதிவாதிகளுக்குமிடையே பிரச்சனை ஏற்பட்டுள்ளதாக வாசாஆ 9 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 05.01.2022 ம் தேதி கூடுதல் தொகை சொல்லி வாசாஆ 6 யை நான் தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. அப்ரூவல் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கூடுதல் வேலை செய்ததற்கான பொருட்களின் தொகைக்கு பில் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான், எனக்கு கொடுக்கவேண்டிய தொகையின் அடிப்படையில் கணக்கீடு செய்துள்ளேன்,. தேவைப்பட்டால் பில்கள் தாக்கல் செய்ய தயராக உள்ளேன். நான் ஜிஎஸ்.டியின் கீழ் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். வாசாஆ 1-ன் வேலைகளை மாற்றி செய்வதற்கோ கூடுதல் வேலை செய்வதற்கோ தனி ஒப்பந்தம் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான். கூடுதல் வேலை செய்வதற்கு வாய்மொழி ஒப்பந்தம் மட்டும் ஏற்படுத்திக்கொண்டோம். வெளிசுவர் பூச்சு, டைல்ஸ் வேலைகள், காம்பவுண்ட் வேலைகள் எதையும் நான் செய்யாமல் பாதியிலேயே கட்டிட வேலையை விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. 936 சதுரடி கட்டிடம் கட்டிவிட்டு அடித்தளம் போட்ட மொத்த சதுரடியான 2435 சதுரடிக்கு கட்டிட வேலை செய்ததாக கணக்கீடு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதன் பிறகு பிரதிவாதிகள் கூடுதல் தொகை செலவழித்து கட்டிட வேலைகளை முடித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. பொய்யான ஆவணங்களின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி